Registered as a Newspaper

லக்கி பிளாஸா
★ பேபி ஐயிட்டம்
★ மின்சார மனேயியற் பொருட்கள்
மற்றும் அன்பளிப்புப் பொருட்களை நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
67, 68, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23509

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

தரத்தில் சிறந்த நவீனமான பொருட்களை நிதான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
லக்கி பிளாஸா
67,68, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23509

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு கார்த்திகை மீ 5 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு அவ் பிறை 18 (21-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 313

★ இனப்பிரச்சினை விவகாரம்

# தீர்வைத் தீர்மானிப்பது புலிகளின் பொறுப்பே!

## அதில் தலையிட நாம் யார்

### என்று கேட்கிறார் தொண்டா

கொழும்பு, நவம்பர் 21

இனப்பிரச்சினைக்குரிய தீர்வைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு, இன்று தமிழீழ விடுதலைப் புலிகளையே சார்ந்ததாகும். அதில் தலையிடுவதற்கு நாம் யார்?

இவ்வாறு அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு. எஸ். தொண்டமான் நேற்றிரவு உதயனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இலங்கை அரசு கிழக்கு மாகாணத்தை மூன்று மாகாண சபைகளாகப் பிரிக்கும் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளதே. இது பற்றி உங்கள் கருத்து என்ன?—

இவ்வாறு உதயன் செய்தியாளர் திரு. தொண்டமானிடம் கேட்டபோது அவர் சொன்னதாவது:

இன்று தமிழருக்காகத் தியாகஞ் செய்துகொண்டிருப்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். இனப்பிரச்சினைக்கான தீர்வு எது என்பதை அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தை மூன்று மாகாண சபைகளாகப் பிரிக்க வேண்டும் என்ற இலங்கை அரசின் யோசனையைத்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரித்து விட்டனரே!

பின்னர் நாம் என்ன கருத்துச் சொல்வது?

தமிழீழ விடுதலைப் புலிகள்தான் இன்று தமிழரின் விடுதலைக்காகத் தியாகஞ் செய்து வரு

(4ஆம் பக்கம் பார்க்க)

## ரகசியமாக பிரபாவை சந்திக்க ஜே. ஆர். திட்டம்

### மறுத்துவிட்டாராம் புலிகள் தலைவர்

சென்னை, நவ. 20

தமது பெங்களூர் விஜயத்தின்போது பிரபாகரனை இரகசியமாக சந்தித்துப் பேச ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன திட்டம் தீட்டியிருந்தார் என்றும் ஆனால் ஜே. ஆரைச் சந்திக்கப் பிரபா மறுத்து விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சென்னைப் பத்திரிகைச் செய்திகள் இதனைத் தெரிவித்தன.

ஜே. ஆரின் விருப்பம் கடந்த 10ஆம் திகதியே யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் தலைவரிடம் தெரிவிக்கப்பட்டது. பத்திரிகை ஆசிரியர் சாமினி நவரட்ண யாழ்ப்பாணத்தில் புலிகளின் தலைவர்கள் கிட்டு, ரஹீம் ஆகியோரைச் சந்தித்து இத்திட்டத்தைத் தெரிவித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் இயக்க தலைவர்களை இலங்கை மந்திரிகளும் சந்திக்க விரும்பம் தெரிவித்ததாகவும்—

இரகசியமாக இந்தச் சந்திப்பை நடத்த மந்திரிகள் தெரிவித்த விருப்பத்தை புலிகளின் தலைவர்கள் ஏற்க மறுத்து விட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

தமிழ்நாடு பொலிஸ் நடவடிக்கை குறித்து

## ராஜீவ் எம்.ஜி.ஆரிடம் கவலை தெரிவித்தார்!

### 'அமெச்சூர் தனம்' என்று கருத்து

புதுடில்லி, நவ.20

தமிழ்ப் போராளிகளிடம் இருந்து ஆயுதங்களைக் கைப்பற்றும் விஷயத்தில் சென்னைப் பொலிஸார் நடந்து கொண்ட முறை குறித்து பிரதமர் ராஜீவ் காந்தி தமிழக முதலமைச்சரிடம் கவலை தெரிவித்திருக்கின்றார்.

போராளிகளிடம் இருந்து நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட விஷயம் பற்றி தேவையற்ற பிரசாரம் செய்யப்பட்ட சம்பவம் குறித்தே பிரதமர் தனது கவலையை முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனிடம் தெரிவித்துக் கொண்டார் என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

சென்னைப் பொலிஸாரின் நடவடிக்கைகள் 'அமெச்சூர்த் தனமாக' இருந்தது என்று பிரதமர் தன்னைச் சந்தித்த முதல் அமைச்சரிடம் தெரிவித்துக்கொண்டார்.

தான் இது பற்றி நடவடிக்கை எடுப்பதாக பிரதமரிடம் முதலமைச்சர் உறுதியளித்தார்.

தமிழ்ப் போராளிகள் மீதான முற்றுகை தமிழ் நாடு முழுவதும் பரவலாக இடம்பெற்றசெய்தி பிரதமருக்கு மறுநாள் தான் அறிவிக்கப்பட்டது.

அதற்கு முன்னர் அவருக்கு இப்படி பரந்த அளவில் முற்றுகை இடம் பெறும் என்று தெரிந்திருக்கவில்லை.

இந்தத் தகவல்களை 'இந்து'வின் அரசியல் விமர்சகர் திரு. ரெட்டி எழுதியிருக்கிறார். (அ-ஐ-எ)

## மீண்டும் யாழ்-திருமலை பஸ் சேவை

யாழ்ப்பாணம், நவ 21

திருமலை - யாழ் பஸ் சேவை கடந்த புதன் கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாரம் மூன்று நாள் இச்சேவை நடைபெறும்.

காலை ஆறு மணிக்கு யாழ் பஸ் நிலையத்தில் இருந்து திருமலைக்கான பஸ் புறப்படும். (இ-10)

## 95 சதவீத பிக்குகள் மாகாண சபைக்கு

### எதிர்ப்பு தெரிவிக்கிறார்களாம்

நாட்டில் உள்ள 35,000 பௌத்த பிக்குகளில் 95சதவீத மானோர் மாகாண சபைக்கு எதிரான தாய்நாடு காக்கும் இயக்கத்தை ஆதரிக்கின்றனர்.

இப்படி மடுலுவவ சோபிததேரர் அறிவித்திருக்கிறார்.

மாகாண சபைகள் தேவை இல்லை. இருக்கும் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்குக் கூடுதல் அதிகாரங்களைக் கொடுத்தாலே போதும்.

மாகாண சபைகளுக்கு எதிரான எமது சமாதான எதிர்ப்பு நடவடிக்கைகள் பலனளிக்காவிட்டால் கடுமையான நடவடிக்கைகளைத்தான் எடுக்க நேரிடும்.

பௌத்த கலாசாரத்தைக் குழி தோண்டிப் புதைப்பதாகவே இலங்கை அரசின் நடவடிக்கைகள் உள்ளன.

இப்படி வண சோபித தேரர் தெரிவித்தார் என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (இ-எ)

## பீதியால் மக்கள் வெளியேற்றம்

காங்கேசன் துறை, நவ.21

பலாலி, வளலாய் அன்ரனிபுரம் பகுதிகளைச்சேர்ந்த மக்கள் பீதியால் வெளியேறி மயிலிட்டி மாதா கோவிலிலும், ஊறணியில் உறவினர் வீடுகளிலும்தஞ்சமடைந்துள்ளனர்.

பலாலியிலிருந்து தொண்டமானாறு, பருத்தித்துறை பகுதிகளுக்கு இராணுவம் அடிக்கடி சென்றுவருவதே இதற்குக் காரணம். (இ-68)

## கல்லடிப் பாலத்தில் சிலிண்டர் கண்ணி வெடி

### சிப்பாய்கள் மீட்டனர்

மட்டக்களப்பு, நவ. 21

கல்லடிப் பாலத்தின் மேல் வைக்கப்பட்டிருந்த சிலிண்டர் கண்ணி வெடியை ஆயுதப்படையினர் நேற்று அகற்றினர்.

நேற்று ஆயுதப்படையினர் விமான நிலையத்தை நோக்கிச் சென்ற சமயமே இக்கண்ணி வெடியைக் கண்டு பிடித்து மீட்டு எடுத்தனர்.

இதைத் தொடர்ந்து 6 மீனவர்களை படையினர் கைது செய்தனர்.

வாரம் தோறும் வியாழனில் கொழும்பில் இருந்து விமான மூலம் படையினர் மட்டக்களப்பு விமான நிலையம் வருவது வழக்கம்.

அப்படி வந்து இறங்கும் விமானத்துக்கும் படையினருக்கும் பாதுகாப்பளிக்கவே கல்லடி முகாமில் இருந்து படையினர் செல்வர்.

அப்படி நேற்றுச் சென்றபோதே படையினர் இக்கண்ணி வெடியைக் கண்டுபிடித்தனர். (இ-எ-21)

முச்சந்தி முனி



பேச்சுத் தோத்தால் இராணுவ நடவடிக்கை எண்டு உவை சொல்லி வந்ததுக்கும் உந்தத் திடீர் விஜயத்துக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ...?

## தமிழக மக்கள் இன்னும் போராளிகள் பக்கம்தான்

### தப்புக்கணக்கு போடாதீர் என ஜே.ஆருக்குகடிதம்

சென்னை, நவ. 20

இலங்கைத் தமிழருக்கு தமிழகத் தமிழர்கள் உளமார, உணர்ச்சி பூர்வமான ஆதரவை இன்னும் வழங்கி வருகின்றார்கள்.

அண்மையில் சென்னைப் பொலீஸார் தமிழ்ப் போராளிகள்மீது எடுத்த நடடிக்கையை வைத்து தடுப்புக் கணக்குப் போடவேண்டாம்.

இப்படி உலகத் தமிழ் இளைஞர் சம்மேளனத் தலைவர் டாக்டர் டி. ஆர். ஜனார்த்தனம் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

பெங்களூரில் திரு. ஜெயவர்த்தனவுக்குக் கிடைக்கக்கூடியதாக இக் கடிதத்தை டாக்டர் ஜனார்த்தனம் அனுப்பி வைத்திருந்தார்.

சென்னைப் பொலீஸாரின் நடவடிக்கையைத் தொடர்ந்து இலங்கை அரசுப் படைகள் தொண்டமானாறு, பருத்தித்துறை, வல்வெட்டித் துறைப் பகுதிகளில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

சென்னைப் பொலீஸாரின் நடவடிக்கையை இலங்கைஅரசு தவறாகப் புரிந்துகொண்டு இச் செயலில் ஈடுபட்டது.

இலங்கைத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தைத் தமிழக மக்கள் இன்னும் பூரணமாகஆதரிக்கின்றனர்.

பொருத்தமான தீர்வு

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'இந்தியா ஹவுஸ்'முன் நியூயோர்க்கில் தமிழர் ஆர்ப்பாட்டம்

நியூயோர்க், நவ. 20

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததை ஆட்சேபித்து நியூயோர்க்கில் உள்ள 'இந்தியா ஹவுஸ்' கட்டடத்துகு முன்னால் இலங்கைத் தமிழர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கடந்த திங்கட்கிழமை நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் 30 பேர் கலந்து கொண்டனர்.

இலங்கை தமிழ் இளைஞர் சங்கம் இதில் கலந்து கொண்டது.

இச்சங்கம் இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய தந்தி ஒன்றில் சென்னைப் பொலீஸாரின் நடவடிக்கையைக் கண்டித்துள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இந்திய அரசு அளித்துவரும் பங்கை இச்சங்கம் தந்தியில் பாராட்டியுள்ளது. (இ-எ)

## சம்மாந்துறை பொலீஸ் நிலையம் மீது நள்ளிரவில் தாக்குதல்

அம்பாறை, நவம்பர் 21

சம்மாந்துறை பொலீஸ் நிலையம் மீது கடந்த புதன் நள்ளிரவு தாக்குதல் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து இரவு முழுவதும் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவண்ணம் இருந்தனர்.

இச்சம்பவத்தில் உயிரிழப்புக்கள், சேதங்கள் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து பொலீஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றை உடைக்கும்படி பாதுகாப்பு வட்டாரங்கள் பணித்துள்ளன.

பொலீஸ் நிலையத்தைச் சுற்றியுள்ள குடிமக்களையும் வெளியேறும்படி பாதுகாப்பு வட்டாரங்கள் கேட்டுள்ளன. (இ-எ-14)

## விஜிதரன் பற்றிய தகவல்

### முழுமையாகக் கிடைக்கும்வரை மாணவர் போராட்டம் தொடரும்

யாழ்ப்பாணம், நவ. [illegible]

விஜிதரன் பற்றிய முழுமையான தகவல்கள் கிடைக்கும்வரை — மாணவர்கள் முன் வைத்த கோரிக்கைகள் இயக்கங்களால் ஏற்றுக்கொள்ளப்படும்வரை - சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடரும்.

யாழ் பல்கலைக் கழக மாணவர் நடத்தும் சாகும்வரை உண்ணாவிரதப்போராட்டம் பற்றிய பத்திரிகையாளர்மாநாடு மாணவர் அமைப்பால் நடத்தப்பட்டது.

அம் மாநாட்டிலேயே இவ்வாறு அமைப்புப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மாணவர்பாதுகாப்பை யிட்டு சகல இயக்கங்களிடமும் அவர்களின் தலைவர்களின் கையெழுத்துடன் கூடிய உத்தரவாதம் கேட்டுள்ளோம்.

அவர்களின் உத்தரவாதத்திலேயே எம் மாணவர்களின் பாதுகாப்பு தங்கியுள்ளது.

விஜி சம்பந்தமாக நாம் எந்த ஓர் இயக்கத்தையும்நேரடியாககுறை கூறி சுட்டிக்காட்டவில்லை.

பொதுவாக எல்லா இயக்கங்களையுமே

(4ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதம் இன்று 3ஆம் நாள்

யாழ்ப்பாணம், நவ 21

யாழ் பல்கலைக் கழக மாணவன் விஜிதரன் காணாமற்போனது தொடர்பாக மாணவர்களால் நடத்தப்பட்டு வரும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தின் மூன்றும் நாள் இன்று ஆகும்!

இரு மாணவிகள் ஒரு வெளியார் உட்பட ஆறு பேர்சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் இவர்களுக்கு ஆதரவாக ஒருநாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

உண்ணாவிரதிகளில் ஒருவரான செல்வி எம். விஜயகுமாரியின்தாயார் நேற்று சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தன் மகளை வந்து பார்வையிட்டு கண்ணீர் மல்க ஆறுதல் கூறிச் சென்றார். (இ-5)

### சுபநேரம்

21—11—1986

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6.10 முதல் 7.40 வரை
ராகுகாலம்:
10.40 முதல் 12.10வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## தொண்டமாறில் வீடுகள் தகர்ப்பு

வல்வெட்டித்துறை, நவ 21

தொண்டமானாறில் பொதுமக்களின் வீடுகள் சிப்பாய்களினால் தொடர்ந்து தரைமட்டமாக்கப்படுகின்றன.

தொண்டமானாறுஇராணுவ முகாமில் உள்ள சிப்பாய்கள் திருத்தம் செய்யப்பட்ட தொண்டமானாறு பாலம் வழியாக வெளியேறி கடற்கரையோரமாக உள்ள பொதுமக்களின் வீடுகள், ஆலய மடங்கள் போன்றவற்றைக் குண்டுவைத்துத்தகர்த்து வருகிறார்கள். (உ-160)

## ஆஸ்திரேலிய நாடாளுமன்றக் குழு

### ஞாயிறன்று இலங்கை வருகிறது

கொழும்பு, நவ. 21

ஆஸ்திரேலிய நாடாமன்றத் தூதுக்குழு ஒன்று இனப்பிரச்சினை பற்றி ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்த நாளை மறுநாள்(ஞாயிறு) கொழும்பு வரும்.

ஆளும் கட்சி எம். பி. திருமதி ஈ. டார்லிஸ் தலைமையில் வரும் இத் தூதுக்குழுவில் அனைத்துக் கட்சி எம். பிக்களும் அடங்குவர்.

பிரதமர், தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருடனும் இக்குழுவினர் பேச்சுக்களை நடத்துவர்.

இனப்பிரச்சினை, அது சம்பந்தமான பேச்சுவார்த்தை விவரங்கள், இருநாடுகளுக்கும் இடையேயான இரு தரப்புப் பிரச்சினைகள், பொருளாதார உதவிகள் ஆகியன குறித்தும் இத்தூதுக்குழுவினர் பேச்சுக்கள் நடத்துவர்.

ஒரு வாரம் இக் குழு கொழும்பில் தங்கி இருக்கும். (இ-எ)

## இஸ்ரவேல் ஜனாதிபதி கொழும்புக்கு திடீர் விஜயம்

### ஜே. ஆரைச் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, நவ. 21

இஸ்ரவேல் ஜனாதிபதி நேற்று கொழும்பு வந்து இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்தி விட்டு உடனே திரும்பினார்.

சிங்கப்பூரில் இருந்து டெல் அவிவ் செல்லும் வழியில் நேற்றுக் காலை 11 மணியளவில் இஸ்ரவேல் ஜனாதிபதி செயிம் ஹெர்சோக் கட்டுநாயக்கவிமானநிலையம் வந்தடைந்தார்.

கொழும்பில் உள்ள இஸ்ரவேல் நலன் பிரிவு அதிகாரிகளும்—

இலங்கை அரசின் சார்பில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் விமான நிலையத்தில் ஜனாதிபதியை வரவேற்றனர்.

இராணுவ ஹெலிக்கொப்டர் மூலம் இராணுவத் தலைமையலுவலகம் வந்த ஜனாதிபதிக்கு பின்னர் ஜனாதிபதி ஜெயவர்த்தன

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## செய்திக்கொத்து

### இந்திரா தினக் கொண்டாட்டம்

புதுடில்லி, நவ 20
மறைந்த அன்னை இந்திராகாந்தியின் 69ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று இந்தியாவில் சகல பகுதிகளிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.
மரக்கன்று நடுதல், அமைதி ஊர்வலங்கள், இரத்ததானம், கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளோடு நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்கான உறுதிமொழியும் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது (உ)

### தொழிலாளர் ஆதரவு

யாழ்ப்பாணம், நவ 21
பல்கலைக் கழக மாணவரின் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக கிராமிய தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் நேற்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.
(இ-5)

### ஜனாதிபதி விளக்கினார்

கொழும்பு, நவ. 21
பெங்களூரில் நடந்த பேச்சுக்கள் பற்றிய விவரங்களை ஜனாதிபதி ஜெயவர்த்தனா நேற்று அமைச்சர்களுக்கு விளக்கினார்.
அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விளக்கம் அளிக்கப்பட்டது.
(உ-எ)

### பயிற்சி வகுப்பு

வேலணை, நவ 21
அகில உலக சென் ஜோன் அம்புலன்ஸ் படை இலங்கைக் கிளை வட பிராந்தியம் தீவுப் பகுதிக்கான புதிய பயிற்சி வகுப்பு ஒன்று எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச் சுவாமி பத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது
(இ-167)

### ஈழப்பெண்கள் விடுதலை முன்னணி ஆதரவு

யாழ்ப்பாணம், நவ 21
பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் காணாமல் போனது தொடர்பாக யாழ். பல்கலைக் கழக மாணவர் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தமது ஆதரவையும் தெரிவிக்கும் முகமாக ஈழப்பெண்கள் விடுதலை முன்னணியினரும் உண்ணா விரதத்தில் கலந்து கொண்டனர்.
(இ-5)

### வருடாந்த பொதுக்கூட்டம்

வேலணை, நவ 21
வேலணை சைவப் பிரகாச வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. செ. வரதலிங்கம் தலைமையில் நடைபெறும்.
கூட்டத்திற்கான சகல ஏற்பாடுகளையும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு. சி த. மகாலிங்கம் செய்துள்ளார். (இ-167)

### அடிக்கல் விழா

சாவகச்சேரி, நவ. 21
நாவற்குழி மகா வித்தியாலயத்தில் திறந்த வெளி அரங்கு, சுற்று மதில் ஆகியவற்றுக்கான அடிக்கல் நடும் விழாவும் மரம் நடும் விழா ஆகியவை சிறப்புற நடைபெற்றன.
அதிபர் திரு. த. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாக்களில் மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா, சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு அ. தங்கராசா ஆகியோர் உட்பட பல பிரமுகர்களும் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர். (உ-31)

### சிறுவர் நிலையம்

மட்டக்களப்பு, நவ 21
நுவரெலியாவிலுள்ள சுவீடிஷ் குழந்தை பராமரிப்பு நிலையத்தில் பராமரிக்கப்பட்டு வரும் மட்டக்களப்பு சிறுவர், சிறுமிகள் மிக மகிழ்ச்சியுடனும், திருப்தியுடனும் வாழ்கிறார்கள்
மேற்படி தகவலை இச் சிறுவர் சிறுமிகளை அங்கு சென்று பார்வையிட்டு திரும்பிய உறவினர்கள் தெரிவித்தனர்
சமூக கலவரங்களில் பெற்றோரை இழந்த 6 பேர் இந்நிலையத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். (இ-21)

### மகிழ்ச்சியும் துக்கமும்

சைப்பிரஸ் தீவின் வட பகுதியை துருக்கிப் பிரதேசமாக பிரகடனம் செய்த மூன்றாவது ஆண்டு நிலையை அங்குள்ள துருக்கியர் கொண்டாடினர். அதே சமயம் தெற்கில் உள்ள கிரேக்கர்கள் இதனைத் துக்க தினமாக அனுஷ்டித்தனர்.


ஆத்மீக அன்பர்களுக்கோர் நற்செய்தி!

**'பஜனாவளி'**

விற்பனை விலை ரூபா 23/-
மலிவு விலை ரூபா 10/-

நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லை ஆதீனத்தில் பெற்றுக் கொள்ளுங்கள்.

அமரர் விசுவப்பா நினைவுக் குழு.
கைதடி.


## அறிவித்தல்

வடமாகாண பெற்றோலியக் கூட்டுத்தாபன முகவர் சங்கம்

பொதுக்கூட்டம்

காலம்: 22-11-86 (சனிக்கிழமை)
நேரம்: காலை 10 மணியளவில்
இடம்: Old Park Chinese Restaurant, 207, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
விடயம்: எரிபொருள் கொள்வனவு, சந்தைப்படுத்தல், சந்தைப்படுத்தலில் முகவர்களுக்குள்ள இடையூறுகள் என்பன பற்றி ஆலோசிக்கப்படும்.

பெற்றோலியக் கூட்டுத்தாபன வடபிரதேச முகாமையாளரும் சமுகமளிப்பார்.

ஆ. இ. கதிர்காமநாதன்
தலைவர்.

### ஆகுதி நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், நவ 21
சோமகாந்தனின் 'ஆகுதி' நூல் அறிமுக விழா ஓட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தில் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3-45 மணியளவில் நடைபெறும்.
நிலையத் தலைவர் திரு. ச. பன்னீர்ச் செல்வம் தலைமை வகிப்பார்.
யாழ் பல்கலைக் கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் கவிஞர் இ. முருகையன் அறிமுக வுரை நிகழ்த்துவார்.
கலாநிதி சபா ஜெயராசா கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் ஆய்வுரையும், கிளிநொச்சி அரச அதிபர் ஜெகா செந்தில்நாதன், சட்டத்தரணிராஜா விஸ்வநாதன் திரு. எஸ். கணேசலேல் ஆகியோர் பாராட்டுரையும் நிகழ்த்துவர். (இ எ)

### சங்குவேலியில் நினைவுத்தூபி

மானிப்பாய், நவ 21
விடுதலைப் புலிகள் இயக்க முன்னணிப் போராளி விக்டருக்கு சங்குவேலி மக்களால் ஞாபகார்த்த தூபி ஒன்று அமைக்கப்பட்டது
சங்குவேலி சிவஞானப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள சந்தியில் இத்தூபி அமைக்கப்பட்டிருக்கிறது.
வீர மரணமடைந்த விக்டரின் 31ஆவது நாள் நினைவு தினத்தன்று தூபி திறக்கப்பட்டதோடு அன்றைய தினம் நாடகம், படக்காட்சி என்பனவும் இடம் பெற்றன. (உ-90)

# போதைவஸ்து, மது, புகைத்தல் பற்றிய கருத்தரங்கு

## மாணவருக்கு கல்வி அமைச்சு நடத்தும்

யாழ்ப்பாணம், நவ 21
போதைவஸ்து, புகைத்தல், குடிவகையால் ஏற்படும் உளவியல் உடலியல் பொருளாதார தாக்கங்களை மாணவர்களுக்கு விளக்கும் விதமான கருத்தரங்கு ஒன்றை கல்வித் திணைக்களம் ஒழுங்கு செய்துள்ளது.
எதிர்வரும் டிசம்பர் 3ஆம் திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கருத்தரங்கு நடைபெறும்.
ஜி. சி. ஈ. உயர்தர மாணவர்கள் கல்வி பயிலும் ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் இரண்டு மாணவப் பிரதிநிதிகள் கருத்தரங்கில் கலந்து கொள்வார்கள்.
பிரதம கல்வியதிகாரி திரு. வி. தங்காராசா தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார்.
போதனா வைத்திய சாலை அதிபர் திரு சி. எஸ். நச்சினார்க்கினியன்; பேராசிரியர் ஏ. நாகேஸ்வரன்; பேராசிரியர் ரி. கணேஸ்வரன்; சமூகமருத்துவ துறை அதிகாரி திரு என். சிவராஜா; மனோதத்துவ நிபுணர் திரு. டி ஜே சோமசுந்தம் ஆகியோர் விரிவுரைகள் வழங்குவார்கள்.
கருத்தரங்கின் இறுதியில் மாணவர்களுக்கு தராதரப் பத்திரங்களும் வழங்கப்படும்.
கருத்தரங்குக்கான ஒழுங்குகளை இளைஞர் கல்வி அதிகாரி திரு. சி. எஸ். சுப்பிரமணியம் மேற்கொண்டுள்ளார்.
இதுவரை கருத்தரங்கு பற்றிய தொடர்புகள் கிடைக்காத கல்லூரிகள் உடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (இ-5)

## சமயத் தலைவர்கள் சகல மதங்களுக்கும் சேவையாற்ற வேண்டும்

காங்கேசன்துறை, நவ. 21
சமயத்தலைவர்கள் ஒரு மதத்தவருக்கு மட்டும் பணியாற்றாது சகல மத மக்களுக்கும் சேவையாற்ற வேண்டும் தனிநாயகம் அடிகள் சர்வ மதத்துக்காகவும் பணியாற்றினார்.
இப்படிக் கூறுகிறார் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.
வலி - வடக்கு பிரசைகள் குழு ஒன்றியத்தின் ஆதரவில் வண பிதா தேவராஜன அடிகளாருக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் அவர் உரைநிகழ்த்தினார்.
தெல்லிப்பளை ப.நோ. கூ. சங்க மண்டபத்தில் திரு அ குமரகுரு தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் உரையாற்றிய வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் கூறியதாவது,
'காலத்துக்கு ஏற்றவாறு மக்களின் தேவைகளை அறிந்து சமயத் தலைவர்கள் பணியாற்ற வேண்டும். இவ்வகையில் இன்னல் மிகுந்த இக்கால கட்டத்தில் இவர் ஆற்றிய சேவை அழியாத இடத்தைப் பெற்றுள்ளது' என்றார்.
முன்னாள் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். இராசரத்தி

(3ஆம் பக்கம் பார்க்க)

### கல்விக் கருத்தரங்கம்

யாழ்ப்பாணம், நவ. 21
மதி அக்கடமி (மதி ஊரெழு) வழங்கும் கல்விக் கருத்தரங்கம் எதிர்வரும் ஞாயிறுகாலை மகவம் அதிபர் திரு வேல் அமிர்தன் தலைமையில் நடைபெறும்.
முதன்மை விருந்தினர்களாக ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் திரு தி. பாலசுப்பிரமணியம், பலாலி ஆசிரியர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. பி. பரமேஸ்வரநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். (இ

## விளையாட்டரங்கு

### மாவை ரட்ணம் சாம்பியனாகியது

காங்கேசன்துறை, நவ 21
மாவை லயன்ஸ் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மாவை ரட்ணம் விளையாட்டுக் கழகத்துக்கும்-அளவெட்டி யுத் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையேயான இறுதிப் போட்டியில் மாவை ரட்ணம் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சாம்பியனானது.
மாவை லயன்ஸ் கழகம் நியுகோ ரேடிங் கம்பனியாருடன் இணைந்து காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபன மைதானத்தில் நடத்திய இந்த உதைபந்தாட்ட இறுதிப்போட்டி மிகவும் விறுவிறுப்பாகவும், பரபரப்பாகவும் நடைபெற்றது.
மாவை ரட்ணம் விளையாட்டுக் கழகம் 5-2 கோல்களால் வெற்றி பெற்றது.
போட்டியில் சிறந்த விளையாட்டு வீரர்களாக வி. தர்மகுலநாதனும் (மாவை) எம். ரவீந்திரனும் (அளவை) தெரிவு செய்யப்பட்டனர்.
மூன்றாம் இடத்தை தெரிவதற்காக நடந்த போட்டியில் தெல்லிப்பளைகிறஸ்கொப்பர்ஸும் லங்கா சீமெந்து விளையாட்டுக் கழக அணியும் மோதின.
இப் போட்டியில் சிமெந்து அணி 3 - 2 கோல்கணக்கால் வெற்றி பெற்றது.
பரிசளிப்பு விழா கழகத்தலைவர் திரு. பி. ஜே. அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.
பிரதம விருந்தினராக அகில இலங்கை லயன்ஸ் கழக தொழிற்துறைப் பயிற்சி திட்டத் தலைவர் திரு. இ. விஜயரத்தினம் கலந்துகொண்டார். (இ-68)

### முல்லைக்கிண்ணம் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்துக்கு

முல்லைத்தீவு, நவ. 21
முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அன்பளிப்புச் செய்த 'முல்லை' கிண்ணத்துக்காக மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முல்லைத்தீவு மகா வித்தியாலயம் சாம்பியனாகியது
முல்லைத்தீவு மகாவித்தியாலயத்துக்கும் செம்மலை மகாவித்தியாலயத்துக்கும் இடையே முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் முல்லைத்தீவு மகா வித்தியாலயம் 4-0 என்ற விகிதத்தில் கோல்களைப் போட்டு முல்லைக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.
இப் போட்டிக்கு திரு. சிறில் நடுவராகக் கடமையாற்றினார்.
போட்டியைத் தொடர்ந்து மேலதிக அரசாங்க அதிபர் திரு. தேவசிகாமணி தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் 'முல்லை' வெற்றிக்கிண்ணத்தை முல்லைத்தீவு மகாவித்தியாலய கோஷ்டித் தலைவர் செல்வன் போ. சத்தியரூபனும் சொந்தமான இணைக் கிண்ணத்தை துணைத் தலைவர் செல்வன் அ, கியாசெப் யூட்டும் மாவட்ட அமைச்சரின் செயலாளர் திரு. செல்வரத்தினத்திடமிருந்து பெற்றுக்கொண்டனர். (இ-92)

### வட்டுக்கோட்டை அதிபர்கள் சங்கக் கூட்டம்

வட்டுக்கோட்டை, நவ. 21
வட்டுக்கோட்டை வட்டார அதிபர்கள் சங்க மாதாந்தப் பொதுக்கூட்டம் பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரியில் வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் நடைபெறும்.
காரைநகர், சுழிபுரம், பண்டத்தரிப்புஆகிய வலயங்களிலுள்ள பாடசாலை அதிபர்கள் இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.
பாடசாலைப் புனரமைப்பு சம்பந்தமான முக்கிய விடயங்கள் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படவுள்ளன. (இ161)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## சாகும்வரை உண்ணாவிரதத்தை மறுபரிசீலனை செய்க

### பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 21
யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் சாகும் வரை உண்ணாவிரத நடவடிக்கையை மறு பரிசீலனைசெய்யுமாறு மாணவர் அமைப்புக் குழுவை யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.
மாணவர்களின் பல கோரிக்கைகளின் நியாயமான தன்மையை ஆசிரியர் சங்கம் ஏற்றுக் கொண்ட போதிலும் தற்சமயம் தமிழ் பிரதேசங்களில் காணப்படுகின்ற பாரதூரமான நிலைமைகளை கவனத்தில்கொண்டு சாகும் வரை உண்ணாவிரத நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்யுமாறு சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது என்று சங்கச் செயலாளர் ந. பேரின்பநாதன் தெரிவித்தார்.
(இ-5)

## புத்தூர்- வாதரவத்தை போக்குவரத்துத் துண்டிப்பால் உணவுக்குத் தட்டுப்பாடு

பலாலி, நவ. 21
புத்தூர்— வாதரவத்தை கிராமத்தின் போக்கு வரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
புத்தூரிலிருந்தும் சாவகச்சேரியிலிருந்தும் வாதரவத்தைக்குச் செல்லும் பெரிய மதகு ஒன்று முற்றாக உடைந்து விழுந்துள்ளது.
இதனால் வாதரவத்தைக் கிராமத்திலுள்ளவர்களுக்கு உணவு எடுத்துச் செல்லும் வாகனங்கள் தற்போது செல்ல முடியாதுள்ளன.
சைக்கிளிலும், கால்நடையாகவும் வெள்ளத்தினூடாகவும் எடுத்துச் செல்லப்படும் உணவுப் பொருள்கள் கூடிய விலைகளில் விற்கப்படுவதனால் அப்பகுதி மக்கள் பாதிப்படைய நேர்ந்துள்ளது
இதனைக் கவனத்தில் கொண்டு உடனடியாக பாலத்தைத் திருத்தி போக்குவரத்துக்கு உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அவ்வூர்ப் பொது நிறுவனங்கள் வேண்டியுள்ளன.

### 50 வருடத்தில் முதலாவது சித்தி

யாழ்ப்பாணம், நவ. 21
இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள நிலகாமம் அரசினர் தமிழ் பாடசாலையில் இந்த ஆண்டு நடைபெற்ற 5 ஆம் வகுப்பு புலமைப் பரீட்சையில் செல்வன் கே. பி. நவசீலன் சித்தி அடைந்துள்ளார்.
பாடசாலையின் 50 வருட காலத்தில் ஐந்தாம் வகுப்பு புலமைப் பரீட்சையில் மாணவர் ஒருவர் சித்தி அடைந்தது இதுவே முதல் தடவை. (இ)

### "என்கதை" வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 21
காலஞ்சென்ற எழுத்தாளர் கே. டானியலின் 'என்கதை' நூல் வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணி அளவில் நல்லூர் இந்து விடுதி மண்டபத்தில் நடைபெறும்.
பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் திரு சொக்கன் புலவர் ஈழத்துச் சிவானந்தன், திருவாளர்கள் ஏ. ஜோதிவர்மன், கே. தங்கவடிவேல், வே. சித்திவிநாயகன், பொன். பொன்ராசா, எஸ் வன்னியகுலம், எஸ். திருச்செல்வம், மூலிகை ஆசிரியர் வி. ரி இளங்கோவன், ஜனாப் எம் ஏ சி. இக்பால் ஆகியோர் உரை நிகழ்த்துவர். [illegible] பெற்ற டானியலின் இறுதி ஊர்வல அஞ்சலி [illegible]

### மக்கள் முகம்

### கலைவாணி கிராம அபிவிருத்திச் சங்கம்

நெடுங்கேணி, நவ 21
முல்லைத்தீவு மாவட்ட தண்டுவான் கிராமசேவகர் பிரிவில் உள்ள கலைவாணி கி. அ சங்க மண்டபத்தில் முல்லைத்தீவு உ. அ. அதிபர் தலைமையில் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.
நடப்பு வருட உத்தியோகத்தர்களாக— தலைவர். திரு பொன் சந்தசாமி, செயலாளர் திரு மு.சிவகுமார், பொருளாளர் திரு. ந. பரமானந்தம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.
மற்றும் ஆறுபேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். (இ)

### பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், நவ. 21
இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை ஆங்கில தின பரிசளிப்பு விழாவும் கலை விழாவும் இன்று வெள்ளிக்கிழமைநடைபெறும்.
அதிபர் திரு. செ. சோதிப்பெருமான் தலைமை வகிப்பார்.
பிரதம விருந்தினராக கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன், உடற் கல்வி கல்விஅதிகாரி திரு. வ. கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (இ-எ
[illegible] 'வீடியோ' படமும் [illegible] படவுள்ளது. (இ)

### மூலிகை தோட்டம்

வேலணை, நவ. 21
யாழ்ப்பாண மாவட்டத்திற்கான கைதடி அரசினர் ஆயுள்வேத ஆஸ்பத்திரி வளவில் ஓர் மூலிகைத் தோட்டமொன்று கைதடி அரசினர் ஆயுள்வேத வைத்தியர் திருமதி இந்திரா சத்தியநாதனின் முயற்சியினால் நிறுவப்பட்டுள்ளது, (ஒ-167)

### பண்டிதர் பரீட்சை

வட்டுக்கோட்டை, நவ21
யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினர் ஆண்டு தோறும் நடத்தும் பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் பரீட்சைகள் 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதி வாரத்தில் நடைபெறவுள்ளன.
இப் பரீட்சைகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி நவம்பர் 30 என ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கச் செயலாளரும் பிரதம கல்வி அதிகாரியுமான திரு கு. சோமசுந்தரம் தெரிவித்துள்ளார். (உ-161)

### நியமனக் கடிதங்கள்

வட்டுக்கோட்டை, நவ. 21
1986 டிசம்பர் மாதம் 5-ம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சி ஈ. சாதாரணதர பரீட்சையில் கடமையாற்றவுள்ள மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்களுக்கான நியமனக் கடிதங்கள் திங்களன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கான கடிதங்களை யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் ஒப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளார்.
இக் கடமையில் ஈடுபடவுள்ள இணைப்பு உத்தியோகத்தர்கள், மேற்பார்வையாளர்கள் நிரந்தர நோக்குநர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் வெகுவிரைவில் நடத்தப்படவுள்ளது, (உ-161)


**உயிர் காக்கும் சஞ்சீவி**

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் உங்கள் உடன் பிறப்புக்களின் உயிர்கள் விலைமதிக்க முடியாத, திரும்பப் பெற இயலாத மாபெரும் சொத்துக்கள்.

மரணத்துடன் போராடுபவரை நீங்களும் காப்பாற்றலாம்

உயிர் காப்பது உன்னத பணி

**யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கி**

உங்கள் வரவை எதிர்பார்த்து நிற்கிறது!

இரத்த தானம் செய்யுங்கள்!
விரைந்து செய்வீர்!!
தொடர்ந்து செய்வீர்!!!

தானத்தில் சிறந்தது இரத்ததானம்

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதயசங்கற்பம்

குடிமக்கள் தங்கள் கடமைகளை உணரும் போது தான் உண்மையான ஜனநாயகம் மலர்கிறது

—அன்னை இந்திராகாந்தி


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல.55. 2வது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம். 21-11-1986 த.பெ இல.23


## நாடு கடத்தல் உடன்பாடுகள்

வெளி நாடுகளில் குற்றம் புரியும் இலங்கையரை, இங்கு நாடு கடத்துவதற்கு வகை புரியும் உடன்படிக்கைகளைச் செய்வதற்கு ஏற்பாடுகள் ஆரம்பமாகி இருக்கின்றன.

உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுவதற்கு ஏதுவாக நகல் ஒன்றைத் தயாரிக்குமாறு சட்ட மா அதிபர் பணிக்கப்பட்டிருக்கிறார் அதற்கான பேச்சுவார்த்தைகளை சம்பந்தப்பட்ட வெளி நாடுகளுடன் மேற்கொள்ளுமாறு வெளி விவகார அமைச்சுக்கும் உத்தரவிடப்பட்டு உள்ளதாம்.

ஒரு நாட்டில், ஏதோ ஒரு காரணத்துக்காகத் தேடப்படும் அந்த நாட்டுப் பிரசைகள் வெளிநாடுகளுக்குச் சென்றால் அவர்களை இலகுவில் வருவிப்பதற்காகவே நாடு கடத்தல் உடன்படிக்கைகள் செய்யப்படுவது உண்டு.

இத்தனை காலமாக நாடு கடத்தல் உடன்படிக்கை எதையும் எந்த வெளி நாட்டுடனும் செய்வதற்கு இல்லாத அவசரத் தேவை இப்போது ஸ்ரீலங்காவுக்கு ஏற்பட்டிருக்கிறதோ?

இதன் உள்நோக்கம் எல்லோருக்கும் நன்கு புரியும். இங்கிருந்து பாதுகாப்புக் கருதி வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழ் இளைஞர்களை தமது பொறிக்குள் சிக்க வைப்பதே நாடு கடத்தல் உடன்படிக்கைகளைச் செய்ய முனைவதன் முழு நோக்கமுமாகும்.

புத்தரின், காந்தியின் தத்துவங்களில், கோட்பாடுகளில் முழு நம்பிக்கை உடையவர் என்றும் அவற்றைப் பின்பற்றுபவர் என்றும் பெங்களூர் மாநாட்டில் தத்துவப் பிரசங்கம் செய்தவர் ஸ்ரீலங்கா ஜனாதிபதி.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடி வரும் போராளிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் தயாராக இருப்பதாகக் கூறி வருவது ஸ்ரீலங்கா அரசு.

தமிழர் பிரச்சினையைச் சமாதானமாக, மனிதாபிமானத்தோடு தீர்த்து வைக்க வேண்டும் என்ற மனவிருப்பம் அரசுக்கு உண்மையிலேயே இருக்குமானால், வெளிநாடு சென்ற தமிழ் இளைஞர்களைப் பொறிக்குள் சிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்திருக்காது. பழிவாங்கும் மனோபாவம் உண்டாகி இருக்கவும் முடியாது அதற்கான நடவடிக்கைகளை அவசரப்பட்டு மேற்கொள்ள வேண்டியதும் இல்லை.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பஹாமாஸ் என்றும் திம்பு என்றும் பெங்களூர் என்றும் செல்லும் ஸ்ரீலங்கா அரசாங்கப் பிரமுகர்கள் சமாதானத்துக்கு ஊறு விளைவிக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருவதில் தான் அதிக அக்கறை காட்டுகிறார்கள்.

ஸ்ரீலங்கா அரசின் இந்த இரட்டை வேட நாடகம் என்று நிறுத்தப்படுகிறதோ அப்போது தான் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆரம்பமே உருவாகும்.

இலங்கை அரசாங்கத்தின் இந்த இரட்டை வேடம் உலக நாடுகளுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். நாடு கடத்தல் உடன்பாடுகளைச் செய்வதற்கான உள் நோக்கம் எது என்பதும் அவற்றுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

அப்போது தான் சம்பந்தப்பட்ட நாடுகள் உடன்பாடுகளைச் செய்வது குறித்து முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள முடியும்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்ட பின்னரே நாடு கடத்தல் உடன்பாடுகள் குறித்து பரிசீலனை செய்ய வேண்டுமென அந்த நாடுகளை வற்புறுத்துவது அவசியம்.

தமிழர் நலன் கருதி வெளிநாடுகளில் இயங்கும் அமைப்புக்கள் இது விடயத்தில் தமதுகவனத்தைச் செலுத்த வேண்டும்.

## பிரபா கைதானதை கண்டித்து நடந்த ஊர்வலம்

யாழ்ப்பாணம், நவ. 21

இந்திய அரசாங்கத்தால் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டமையை கண்டித்தும், பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களை திருப்பிக் கொடுக்குமாறு கோரியும் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது.

குப்பிளான் சந்தி, புன்னாலைக்கட்டுவன் ஆகிய இடங்களில் ஆரம்பமாகி நீர் வேலி கந்தசாமிகோவில் வரை இந்த ஊர்வலம் நடைபெற்றது.

இப் பேரணியில் புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், வயாவிளான், ஒட்டகப்புலம், ஈவினை ஆகிய இடங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பாடசாலை மாணவ மாணவியர் ஆசிரியர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் பங்கு பற்றினர்.

ஊர்வல முடிவில் பொதுக்கூட்டமும் இறுதியாக மக்கள் கலை அரங்கத்தின் வீதி நாடகமும் இடம்பெற்றன.

ஊர்வலத்தில் பின்வரும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

சார்க் மாநாடு பெங்களூரில் சாவும் சாக்காடும் எங்களூரில்.

'இந்திய அரசே ஏன் இந்த அநீதி'

தமிழீழத்தில் குண்டு வீச்சு

தமிழகத்தில் சாம் 7 பறிமுதல். (ஒ)

### நியாய விலையில்

யாழ்ப்பாணம், நவ. 21

விவசாயிகளுக்கு நியாய விலையில் கிருமிநாசினி, உரம், விதைகள், மரக்கறி என்பன கிடைக்க தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் வசதிகளைச் செய்துள்ளது

இதன் முதல் கட்ட நடவடிக்கையாக சங்கத்தின் சகல கிளைகளிலும் மரக்கறி, விதைகள், விதை கிழங்குகள் என்பன நியாய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (இ-5)

### பேச்சுக்கள் குழம்புமா?

மணிலா, நவ.20

பிலிப்பீன்ஸில்தொழிற் சங்கத்தலைவர் ரோலாண்டோ ஒலாவியாவின் படுகொலை குறித்த விசாரணைகளிலேயே கிளர்ச்சிவாதிகளுக்கும் அரசிற்கும் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமா என்பது உறுதிப்படும்.

ஒலாவியாவின் படுகொலைக்கு பாதுகாப்பு அமைச்சர் என்றைலும் உடந்தையாக இருந்ததாக கிளர்ச்சிவாதிகள் கருத்துவெளியிட்டனர்.

குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு சரியான முறையில் தண்டிக்கப்படும்வரை யுத்த நிறுத்தம் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை நடத்த முடியாது என கிளர்ச்சிவாதிகள் அறிவித்தனர். (ஒ)

# பஞ்சாப்பில் மீண்டும் மோதல்

## ஊரடங்கு உத்தரவு

சண்டிகார், நவ. 20

பஞ்சாப் மாநிலத்தில் இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் இடையில் மோதல்கள் மீண்டும் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் 20 பேர் பலியாகியுள்ளனர்.

இந்து சமயத்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் நகரத்தில் இந்த உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன.

தீவிரவாத இந்து இயக்கமான சிவசேனா ஏற்பாடு செய்திருந்த வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ள சீக்கிய கடைக்காரர்கள் மறுத்ததைத் தொடர்ந்தே இந்த மோதல்கள் ஆரம்பமாகின. (ஒ)

### காவல்துறை அதிகாரிகள் பலி

சண்டிகார், நவ. 20

பஞ்சாப்பில் நேற்று கிளர்ச்சியாளர்கள் மத்திய ரிசேர்வ் காவல் படையினர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தனர்.

இதில் காவல் துறையைச் சேர்ந்த நான்கு உயர் அதிகாரிகள் பலியானார்கள்.

ரோந்து பணிகளின் போது இவர்கள் சுடப்பட்டனர்.

இருளில் தப்பியோடிய கிளர்ச்சியாளர்கள் காவல் துறையினரின் ஆயுதங்களையும் அபகரித்துச் சென்றனர். (ஒ)

## ஆயுத விற்பனையை யூகோ. அதிகரித்தது

பெல்கிரேட், நவ.20

யூகோஸ்லாவியா அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஆயுதங்களினதும் ஏனைய இராணுவ உபகரணங்களினதும் ஏற்றுமதியை 15சதவீதம் அதிகரிக்கவிருக்கின்றது.

சென்ற ஆண்டில் இருநூறு கோடி டாலருக்கும் அதிகமான ஆயுதங்களையும் இராணுவ உபகரணங்களையும் யூகோஸ்லாவியா ஏற்றுமதி செய்தது

யுத்ததாங்கிகள், போர் விமானங்கள் நீர் மூழ்கிக் கப்பல்கள் என்பன இதில் அடங்கியிருந்தன.

லிபியா ஈராக் என்பனவே பெருந்தொகையான அளவில் இவற்றைக்கொள்முதல் செய்யவிருந்தன. (ஒ)

## வெளி உலகில்

பயங்கரவாதம்

### அர்த்தம் நிர்ணயிக்க சர்வதேசக் குழுவா?

### இஸ்ரவேல் கண்டனம்

தெல்அவிவ், நவ. 20

பயங்கர வாதம் என்ற சொல்லின் அர்த்தத்தை நிர்ணயிப்பதற்கு சர்வதேச குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

இவ்வாறு சிரிய ஜனாதிபதி ஆஸாத் விடுத்த வேண்டுகோளை இஸ்ரவேல் வெளிநாட்டு அமைச்சர் ஷிமோன் பெரஸ் கண்டித்தார்.

பயங்கரவாதத்திற்கு சிரியா வழங்கும் ஆதரவை நியாயப்படுத்தி சட்டபூர்வமாக்குவதற்காக எடுக்கப்படும் ஒரு முயற்சி இதுவாகும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)

### படகு விபத்து

ஜெய்ப்பூர், நவ.20

ராஜஸ்தான் மாநிலத்தில் ஏற்பட்ட கோர படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 48 ஆக அதிகரித்துள்ளது.

இன்று 10 பேரின் சடலம் பொலீஸாரால் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்து ஆலயம் ஒன்றிகு யாத்திரை மேற்கொண்ட பின்னர் பராமாஸ் ஆற்றின் வழியாக வீடுதிரும்பிக் கொண்டிருந்தவர்களுக்கே இப்பரிதாப கதி ஏற்பட்டுள்ளது.

படகில் சுமார் 100 யாத்திரிகர்கள் இருந்தார்கள். (ஒ)

### பாப்பரசர் பங்களாதேஷில்

டாக்கா, நவ. 20

பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் ஆசியா பசுபிக் பிராந்தியம் அவுஸ்திரேலியா இந்து சமுத்திர நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

நேற்று பங்களாதேஷிற்கு அவரது பயணத்தின் முதற்கட்டமாக வந்து சேர்ந்தார்.

இன்று மாலை பங்களாதேஷிலிருந்து புறப்பட்டு அவுஸ்திரேலியா செல்லும் பாப்பரசர் ஆறுநாட்கள் அங்கு தங்கியிருப்பார்.

டாக்காவில் நடக்கும் ஆராதனைகளில் 12 பேருக்குப் புதிதாக குருப்பட்டம் வழங்குவார் (ஒ)

### 300 சிப்பாய்கள் பலி

அடிஸ்அபாபா, நவ.20

எதியோப்பியாவின் வடபகுதியில் அரசு துருப்புகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்குமிடையே கடும் சண்டை நடந்தது.

இதனால் அரச சிப்பாய்கள் 300க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாகவும் 520பேர்சிறைபிடிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### சோதனைக் குழாய் குழந்தை

கல்கத்தா, நவ.20

கல்கத்தாவில் முதலாவது சோதனைக் குழாய் குழந்தை தனியார் ஆஸ்பத்திரியில் பிறந்தது.

டாக்டர்கள் குழுவின் உதவியுடன் மூன்று கிலோ எடையுள்ள ஆண்குழந்தை சுகமாகப் பிறந்ததாக அறிவிக்கப்பட்டது.

இந்தியாவில் இது இரண்டாவது சோதனைக்குழாய் குழந்தையாகும். (ஒ)

### அறப்பேரணி தலைவரின் மகன் கைது

மட்டக்களப்பு, நவ. 20

தமிழரசுக் கட்சியின் அறப்பேரணித் தலைவர் அமரர் ஆர். டபிள்யூ. அரியநாயகத்தின் மகன் சந்திரா நேரு ஆயுத படையினரால் கைது செய்யப்பட்டு திருக்கோவில் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (இ-21)

# விநாயகர் ஷஷ்டி விரதம்

ஓங்கார வடிவமாகிய பிள்ளையாரை எண்ணிய கருமங்கள் யாவும், எளிதில் முற்றுப் பெறத் தொழுது மேம்படுவது சைவமரபு இக்காரணம் பற்றியே 'வழிபடுமவர் இடர்கடி கணபதி' என்று திருஞானசம்பந்தர் அருளினார்.

பிரணவமானது சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பீடமாகவும், தேவர் கட்கெல்லாம் பிறப்பிடமாகவும், எல்லா மந்திரங்களுக்கும் வேதங்களுக்கும் மூலமாகவும் உள்ளது.

அடியவர் இடர் நீக்கும் பெருமை வாய்ந்த வரும், எல்லாவிதமான சிறப்பும் அமைந்த பிரணவமூர்த்தியாகிய விநாயகப் பெருமானின் விரதங்கள் மூன்று அவை சுக்கிரவார விரதம், விநாயக சதுர்த்தி விரதம், விநாயக ஷஷ்டி விரதம் என்பன.



கார்த்திகை மாதக் கிருஷ்ணபக்ஷ பிரதமை முதல் மார்கழி மாத சுக்ல ஷஷ்டி வரையுமுள்ள 21 தினங்கள் விநாயகப் பெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் விரதம் விநாயக விரதம் என்று சொல்லப்படும் இவ்விரதம் அனுஷ்டிப்பவர்கள் அதிகாலையில் ஸ்நானம் செய்து ஆசாரத்துடன் ஆலயதரிசனம் செய்து, விநாயகப்பெருமானுக்கு அர்ச்சனை, அபிஷேகம் முதலியன செய்வித்து வணங்கி ஒரு பொழுது உட்கொள்ள வேண்டும்.

இக்காலத்தில் 21 இழைகளாலான நூலை ஆடவர்வலக்கரத்திலும், பெண்கள் இடக்கரத்திலும் கட்டித் தமக்குக் காப்பாகக் கொள்வர். இருபத்தோராம் நாள் சதயமும் ஷஷ்டியும் சேர்ந்து வருமாயின் மிக உத்தம நாளாகும். அப்படி வரும் நாளை 'சதயம் தொட்ட ஷஷ்டி நல்விரதம்' என்று புகழ்வார்கள்.

இம்முறை இவ்விநாயக ஷஷ்டி விரதம் 17 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி டிசம்பர் ஆறாம் திகதி நிறைவு பெறுகின்றது

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்.

ஞானக்கதிர்

மலர்ஜீவன்

## வட இலங்கை சங்கீத சபை வருடாந்தக் கூட்டம்

கொடிகாமம், நவ. 21

வட இலங்கைச் சங்கீத சபையின் வருடாந்தக் கூட்டம் கல்விப் பணிப்பாளரும் சபைத்தலைவருமான திரு. இ. சுந்தரலிங்கம் தலைமையில் நல்லூர் ஸ்ரீ ஸ்ரீ பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

சங்கீத சபையின் உபதலைவருள் ஒருவராகவும் சபை உறுப்பினராகவும் இருந்த டாக்டர் கே. சிவஞானரத்தினத்தின் மறைவு குறித்து 2 நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

இசைக் கலைஞர்... இசைக்கலையில் தமது ஐயங்களை நீக்கவும் இசை பயிலும் மாணவர் இசை நுணுக்கங்களைப் படித்துத் தேறவும் வாய்ப்புடைய இசை நூல்கள் உள்ள நூல் நிலையம் வெகு விரைவில் அமைக்கப்பட இருக்கிறது.

சபையின் உபதலைவர் பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் பேசுகையில் வட இலங்கைச் சங்கீத சபை பொன் விழா கண்ட புராதன சபை.

இதனை சென்னையில் உள்ள இசைச்சபைகளின் தரத்தில் நாம் மதிக்க வேண்டும் அவற்றுக்கமையவே பரீட்சைகளும் நடத்தவேண்டும் ... உரையாற்றினர். (இ-76)

## வாசகர் திருமுகம்

### உப-தபால் நிலையங்கள் சேவை மனப்பான்மையுடன் இயங்க வேண்டும்

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். பெரிய தபாற்கந்தோர் பழைய இடத்தில் செயல்படுவது இல்லை. இரண்டாம் குறுக்குத் தெருவில் இயங்கினாலும் அங்கு முத்திரை விற்கப்படுவது இல்லை.

மக்கள் அங்கு செல்வதும் சிரமம் ஆக உள்ளது. பாதுகாப்பும் இல்லை.

இதனால் உபதபால் கந்தோர்களைத் தான் பொதுமக்கள் நம்பியிருக்கின்றனர். ஆனால் உபதபால்கந்தோர்கள் சரியானபடி சேவையைச் செய்ய முடியவில்லை. காரணம் சில உபதபால் நிலையங்களில் பணிபுரியும் சில பெண் ஊழியர்களின் கவனயீனங்கள்.

எதற்கு எடுத்தாலும் இல்லை என்ற சொல்லே பெண் ஊழியர்களின் வாயில் இருந்து வருகின்றது.

எதைக் கேட்டாலும் ''இல்லை'', ''நாளைக்கு'' ''சில்லறை இல்லை'' போன்ற சொற்கள்தான் இப் பெண் ஊழியர்களின் வாய்களில் தவறாமல் வரும்.

இப்படியான நிலைமை நீடிக்க வேண்டுமா? உப தபால் நிலையங்களில் உள்ளோர் சேவை மனப்பான்மையுடன் செயற்பட மாட்டார்களா?

யாழ்ப்பாணம். யோ. அன்ரன் ஜெயக்குமார்

## சத்திய சாயி பாபா 61ஆவதுஜெயந்திவிழா

### 30 ஆம் திகதி திருநெல்வேலியில்

யாழ்ப்பாணம், நவ. 21

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 61 ஆவது ஜெயந்தி தின விழாவுடன் சிறுவர்களுக்கான மனித மேம்பாட்டுக் கல்வி அறிமுகப் பொருட்காட்சியும் இம் மாதம் 30 ஆம் திகதி திருநெல்வேலி தெற்கு சேர். பொன் இராமநாதன் வீதியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தி மண்டபத்தில் நடைபெறும்.

காலை தொடக்கம் மாலை வரை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

காலை 8 மணிக்கு பாலவிகாஸ் நிலையங்களின் மாணவ, மாணவிகளின் அணிவகுப்பு இடம் பெறும். அகில இலங்கை பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக்குழுத் தலைவர் திரு. எஸ். சிவஞானம் சர்வமதச் சின்னக் கொடியை ஏற்றிவைப்பார்.

பேராசிரியர் பி சந்திரசேகரம் பொருட்காட்சியை திறந்துவைப்பார்.

பிற்பகல் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும்

பாபாவின் வாழ்க்கையும் போதனையும் என்னும் பொருள் பற்றி பொறியியல் ஆலோசகர் திரு. ஏ நடராசா பேசுவார்.

'ஒரு விஞ்ஞானியின் கண்ணோட்டம்' என்ற தலைப்பில் டாக்டர் எஸ். வாமதேவன் பேசுவார். (இ-எ)



### திருக்குறள்

குறள்:

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்த பின்
உய்யா விழுமம் தரும்

பொருள்:

தான் ஒன்றும் செய்யாதிருக்கத் தனக்குத் தீங்கு செய்தவர்க்கும் துன்பமானவற்றைச் செய்தால் செய்த பிறகு தப்ப முடியாத துன்பத்தையே கொடுக்கும்.

# நாவலர் விழா

யாழ்ப்பாணம், நவ. 21

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் நாவலர் விழா இம்மாதம் 23 ஆம் 24 ஆம் திகதிகளில் நடைபெறும்.

ஞாயிறுக்கிழமை காலை நிகழ்ச்சிகளுக்கு உபவேந்தர் சு. வித்தியானந்தன் தலைமை வகிப்பார்.

பலதுறைகளைச் சேர்ந்த சான்றோர் பாராட்டப்பட்டு பட்டமளித்து கௌரவிக்கப்படுவார்கள்.

மாலை நிகழ்ச்சிகளுக்கு மாநகர ஆணையாளர் திரு சீ. வி. கே சிவஞானம் தலைமை வகிப்பார்.

திரு. க. சி. குலரத்தினம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

நாவலர் நோக்கில் சைவம்பற்றி திருமதி வசந்தா வைத்தியநாதனும், தமிழியல்பற்றி திரு சி. சிவலிங்கராஜாவும், சமூகம் பற்றி திரு. இ. ஜெயராஜும் உரையாற்றுவார்கள்.

நாவலர் பிறந்திலரேல் என்ற கவியரங்கிற்கு திரு இ முருகையன் தலைமை வகிப்பார்.

கவிஞர்கள் இளங்கம்ப பாரதி, கல்வயல் குமாரசாமி சோ. பத்மநாதன், புதுவை இரத்தினதுரை ஆகியோர் பங்குபற்றுவார்கள்.

வேய்ங்குழலும் நாதஸ்வரமும் கலையரங்கை அலங்கரிக்கும்.

வித்துவான் ஏ. நமசிவாயம் புல்லாங்குழலிலும் திரு பஞ்சாபிகேசன் நாகேந்திரம் நாதஸ்வரத்திலும் கலையரங்கை மெருகூட்டுவார்கள்

24 ஆம் திகதி திங்கட்கிழமை கந்தபுராண பூர்த்திவிழா நடைபெறும்.

இந் நிகழ்ச்சிகள் நாவலர் கலாச்சார மண்டபத்திலும் நாவலர் மணிமண்டபத்திலும் நடைபெறும். (ஒ)

### கௌரவிக்கப்படுவோர் பட்டியல்

சிவாச்சாரியார்: பிரம்மஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள். சைவக்குரு: ஸ்ரீ. க. சிவலோகநாதக் குருக்கள் சைவப்பிரசாரம்; ஆத்மஜோதி நா. முத்தையா, வித்துவான் வசந்தா வைத்தியநாதன்

புராண படனம்: திரு. சி. தம்பியையா உபாத்தியாயர் பண்ணிசை: திரு. வேலுப்பிள்ளை சிவஞானம் தமிழ் வளர்ச்சி: புலவர் ந. சிவபாதசுந்தரனார், திரு க. சிவராமலிங்கம், திரு. க. சொக்கலிங்கம்.

சிறுகதை: திரு அ. செ. முருகானந்தன் கவிதை; திரு. இ. முருகையன், பத்திரிகை; திரு. இ சிவகுருநாதன், சஞ்சிகை: திரு. டொமினிக் ஜீவா, ஓவியம்: திரு வீ கனகலிங்கம் (வீகே) சிற்பம்: திரு. செ. கந்தசாமி ஆசாரியார்

இசை; வித்துவான் என். சண்முகரத்தினம் சாகித்தியம்: வித்துவான் என். வீரமணிஐயர் நாதஸ்வரம்: மாவிட்டபுரம் க ராசா நாடகம்: திரு ஏ ரி. பொன்னுத்துரை.

நாட்டுக்கூத்து: திரு வி. வி. வைரமுத்து நடனம்; திரு வேல் ஆனந்தன் வில்லிசை: திரு. க. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி)

### சமயத் தலைவர்---

(2-ம்பக்கத் தொடர்ச்சி) ...னம் பேசுகையில், நிர்வாகம் சீர்கெட்ட நிலையில் மக்களுக்கு உதவ பிரசைகள்குழு அமைக்க முன் நின்றார். அத்துடன் மக்கள் கஷ்டங்களில் இருந்து மீளபிரார்த்தனையிலும் ஈடுபட்டார் என்றார்,

மற்றும் தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு- சி. சிவமகாராசா உட்பட பலர் உரையாற்றினார்கள். (இ-68)

### ஆண்டு விழா

காங்கேசன்துறை, நவ 21

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய மகளிர் இல்ல நான்காவது ஆண்டுவிழா நாளை சனிக்கிழமை விமரிசையாக நடைபெற உள்ளது.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். கல்விப் பணிப்பாளர். திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-68)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஸ்ரூடியோ வீனஸ்
சிறந்த வீடியோ
படப்பிடிப்பாளர்கள்
266/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


# உதயன்

21 - 11 - 1986 வெள்ளிக்கிழமை


ஸ்ரூடியோ வீனஸ்
சிறந்த கலர், கறுப்பு - வெள்ளை
படப்பிடிப்பாளர்கள்
266/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நெடுந்தீவுச் சம்பவம்:

## ஈ. பி. ஆர். எல். எவ். வருந்தம் தெரிவிக்கிறது

யாழ்ப்பாணம், நவ. 21

நெடுந்தீவுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுடன் ஏற்பட்ட பிணக்குக் குறித்து ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் வருத்தம் தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது ஸ்தாபனத்தின் தோழர்கள் இருவர் சில சமூக விரோத நடவடிக்கைகள் சம்பந்தமான குற்றச்சாட்டுக்களின் நிமித்தம் விசாரணைக்கு அழைக்கப் பட்டிருந்தார்கள். இதனையடுத்து அவர்கள் தலைமறைவாகி விட்டனர்.

அவர்கள் இந்தியாவுக்கு தப்பிச் செல்லும் நோக்குடன் எமது ஸ்தாபன உடைமைகள் சிலவற்றுடன் நெடுந்தீவு சென்று மறைந்துள்ளனர்.

எமது தோழர்களிடம் இருந்து தப்பிக்கொள்வதற்காக தம்மை தமிழீழ விடுதலைப் புலிகள் என்று இவர்கள் பொய்யான கதைகளை கூறி வந்துள்ளதாக அறிகின்றோம்.

இவர்களது நடமாட்டத்தில் சந்தேகம் கொண்ட விடுதலைப் புலிகள் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

அங்கிருந்த எமது தோழர்கள் - இவர்கள் சம்பந்தமான பூரண விவரம் தெரியாததால் - எமது தோழர்கள் என்ற ரீதியில் அவர்களை விடுதலை செய்யுமாறு கோரியுள்ளனர்.

அதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்கள் செவிசாய்க்காததால் அவ்விருவரையும் விடுவிக்கு முகமாக தாக்குதல் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதுஓர் தவறான அணுகுமுறை. நடந்து முடிந்த சம்பவத்திற்காக நாம் வருந்துகின்றோம். (உ)

## பஸ்நிலைய பகுதி கடைகள் முன் மண்மூடை

### பொருள்களும் அகற்றப்படுகின்றன

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ் பஸ்நிலையப்பகுதியில் உள்ள பல கடைகளுக்கு முன்பாக மண் மூடைகள் அடுக்கப்பட்டு வருகின்றன.

தொடர்ந்தும் பல கடைகளுக்கு முன்பாக மண்மூடைகள் அடுக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை பல கடைகளில் இருந்து பெறுமதி மிக்க பொருள்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றன.

கோட்டை இராணுவ முகாமில் இருந்து எந்த நேரமும் யாழ்நகர் பகுதியை நோக்கி தாக்குதல் நடத்தப்படலாம் எனக் கருதியே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-10)

## டிராக்டரில் வந்த இருவர் உயிரிழந்தனர்

மட்டக்களப்பு, நவ. 21

மட்டக்களப்பு ஆலையடி வேம்பு என்னுமிடத்தில் ஆயுதப்படையினர் கடந்த புதன்மாலை மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் டிராக்டரில் சென்ற இரண்டு ஊர்வாசிகள் உயிரிழந்தனர்.

டி. தர்மன் (27 வயது) கே. நாகராசா (29 வயது) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர். (இ-எ-21)

## இவரைக் கண்டீர்களா?

பூநாறி மரத்தடியைச் சேர்ந்த பெரிய புலம் மகாவித்தியாலய 2 ஆம் வகுப்பு மாணவன் ரிஷிச்சந்திரனை நேற்று (20-11-86) பகல் 1-30 மணியிலிருந்து காணவில்லை. வயது 08, பொதுநிறம், இவர் கடைசியாக கறுப்புநிற அரைக்காற்சட்டையும், காக்கி நிறச்சேட்டும் அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் எம்மிடம் உடன் தொடர்பு கொள்ளவும் 671, கே. கே. எஸ். வீதி, பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம். அல்லது ராஜு ஸ்ரோர்ஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

க. பொ. த. (சாதாரணம்) மாணவர்களுக்கு இதோ ஒரு வரப்பிரசாதம்!

தமிழ் மூலம் ஆங்கிலப் பயிற்சி

English Practice Through Tamil Medium

1980-1985 ஆம் ஆண்டுகளில் நடந்தேறிய ஆங்கில வினாத்தாள்களை மாணவர்கள் இலகுவாக ஆசிரியரின் உதவியின்றி தன்னிச்சையாக பயில்வதற்கேற்ற முறையில் வரிக்குவரி தமிழாக்கம் செய்யப்பட்டு தகுந்த விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. இப்புத்தகம் ஆண்டு 10 ஆம், 11 ஆம் வகுப்புகளில் அரசாங்க பொதுப்பரீட்சைகளில் தேர்ச்சி பெறுவதற்கு உறுதுணை ஆக உள்ளது.

ஆசிரியர்: M. K. தில்லைமோகன்

வெளியீட்டாளர்கள்;

பூபாலசிங்கம் புத்தகசாலை,
4, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்
Phone: 23631

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி: 21 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60/N 86

அரசின் புதிய யோசனை

# திருமலை, அம்பாறையை சிங்கள மயமாக்கும்

## பிரபாகரன் பேட்டி

சென்னை, நவ 20

தமிழர்களின் தாயகமான கிழக்குப் பகுதியில் உள்ள திருமலை, அம்பாறை மாவட்டங்களில் சிங்களவர்களை பெரும்பான்மையாக்குவதே பெங்களூரில் அரசு சமர்ப்பித்த புதிய திட்டத்தின் நோக்கம்.

ஆகவே அதனை ஏற்க முடியாது என்று மத்திய அரசிடம் தெரிவித்துவிட்டோம்.

--இப்படிக் கூறினார் புலிகள் தலைவர் பிரபா.

பெங்களூரில் இருந்து சென்னை திரும்பிய பிரபாகரன் பெங்களூரில் நடந்த பேச்சுவார்த்தை குறித்து செய்தியாளர்களிடம் விளக்கினார்.

அவர் கூறியதாவது:

தனித் தமிழ் ஈழம் தான் எங்கள்கோரிக்கை அதை நாங்கள் கைவிடவில்லை இலங்கைத் தமிழர்களும் முழுமனதுடன் அதனை ஆதரிக்கின்றார்கள்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண ஜே. ஆர். புதிய திட்டமொன்றை கொடுத்துள்ளார். அதை ஏற்க முடியாது.

அது தமிழர்களின் அடிப்படை உரிமைகளை நிறைவேற்றவ[illegible] இல்லை

மாநில தீர்வு மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு



காண முடியாது.

### முதல் மந்திரி

இலங்கையில் தமிழர் வசிக்கும் பகுதிகளில் அமைதி நிலவவேண்டும். இதற்கு இந்தியா தொடர்ந்தும் உதவும் என நம்புகிறோம்.

தமிழர்கள் அதிகம் வசிக்கும் வடக்குப்பகுதியில் என்னை முதன் மந்திரியாக்குவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது. இதை நான் ஏற்கவில்லை.

### ஆயுதம் கேட்கவில்லை

இந்தியாவிடம் இருந்து ஒருபோதும் நான் ஆயுதங்கள் கேட்கவில்லை.

தமிழர்கள் கௌரவமாகவும் அமைதியாகவும் வாழ தார்மீக ஆதரவைத்தான் கேட்கின்றோம்.

இலங்கை அரசின் திட்டங்கள் குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த நாம் எப்போதும் தயார். (உ)

## சிப்பாய்கள் சோதனை

யாழ்ப்பாணம், நவ. 21

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து நேற்று வெளியேறிய சிப்பாய்கள் பொதுமக்களையும் வாகனங்களையும் சோதனையிட்டனர்.

நேற்றுக்காலை 9 மணி அளவில் இச்சம்பவம் நடந்தது.

ஐம்பதுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் முகாமைவிட்டு வெளியேறி கணேசபுரம் பக்கம் நோக்கிச் சென்றனர் என்றும் தெரியவருகிறது.

படையினரின்சோதனை காரணமாக கண்டி வீதியில் கிளிநொசசியைத் தாண்டிச் சென்ற வாகனங்கள் யாவும் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை முகாமிற்கு அருகே தடுத்துவைக்கப்பட்டிருந்தன. (உ-10)

பெங்களூர்--டில்லிப் பேச்சுக்கள்

# ஜனாதிபதியின் அறிக்கை வெளியாகும்

கொழும்பு, நவ 21

பெங்களூர்ப் பேச்சுக்கள், பின்னர் இடம்பெற்ற புதுடில்லிப் பேச்சுக்கள் ஆகியவை குறித்து ஜனாதிபதி இன்று அறிக்கை ஒன்றை வெளியிடுவார்.

இன்று மாலை இந்த அறிக்கை பிரதமர் ஆர். பிரேமதாசவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து இலங்கை அரசு எடுக்க இருக்கும் அடுத்த நடவடிக்கை பற்றி ஜனாதிபதியின் இந்த அறிக்கையில் வெளியிடப்படலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

நேற்று முன்தினம் இரவு வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீது கொழும்பு திரும்பினார்.

இதற்கு முன்னர் அமைச்சர் புதுடில்லியில் நேற்றும் தங்கிநின்று பேச்சுக்கள் நடத்துவதாக இருந்தது.

ஆனால் திடீரென்று நேற்று முன்தினம் இரவே கொழும்பு வந்த அமைச்சர் ஹமீது ஜனாதிபதி, பிரதமர், தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரை முதலில் சந்தித்து புதுடில்லி விவரங்களை தெரிவித்தார், ஏனைய அமைச்சர்களையும் ஜனாப்ஹமீது நேற்று சந்தித்து விவரங்களை எடுத்துச் சொன்னார்.

இதைத் தொடர்ந்து, கிழக்கில் மூன்று மாகாணசபைகளை நிறுவும் யோசனைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்காத நிலையில் அடுத்த நடவடிக்கை என்ன என்பது பற்றி தீர்க்கமான முடிவு ஒன்றை அரசாங்கம் எடுக்க வேண்டியிருக்கின்றது.

அடுத்த 48 மணித்தியாலங்களில் இது சம்பந்தமான முடிவு ஒன்றை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று கொழும்பு அரசுப் பேச்சாளர் ஒருவர் நேற்றுச் சொன்னார்.

''எவ்வளவுக்கு விட்டுக் கொடுக்க முடியுமோ அவ்வளவுக்கு விட்டுக் கொடுத்தே இலங்கை அரசு பெங்களூர் யோசனைகளைத் தயாரித்தது''- இப்படி அந்தப் பேச்சாளர் சொன்னார்,

இதனிடையில் நேற்றுக்காலை நாடாளுமன்றத்தில் பெங்களூர் பேச்சுக்களின் விவரங்களை வெளியிடும் படி எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா கேட்டுக் கொண்டார்.

இது சம்பந்தமான ஜனாதிபதி அறிக்கை இன்று (வெள்ளி) நாடாளுமன்றத்தில் பிரதமரால் சமர்ப்பிக்கப் படும் என்று நேற்று நாடாளுமன்றத்தில் அரசுதரப்பில் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுக்கள், அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள், வழங்கப்பட்ட ஆலோசனைகள் அடங்கிய அறிக்கை ஒன்றை அமைச்சர் ஹமீது நேற்று ஜனாதிபதியிடம் கையளித்தார். (இ-எ)

## விஜிதரன்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

விஜியை தேடிக் கண்டு பிடித்துத் தரும்படி கேட்டோம்,

எல்லா இயக்கங்களும் கை விரிக்கின்றன.

இதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

மூலைக்கு மூலை முகாம்களும் குடாநாடு போராளிகள் கட்டுப்பாட்டில் என்று அறிக்கைகளும் வைத்திருக்கும் அவர்கள் இப்படிக் கைவிரிக்க முடியாது.

மேலும் சகல இயக்கங்களும் உண்ணாவிரதத்தை குழப்பமாட்டோம் என்று உறுதியளித்துள்ளன.

இப்படி மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## தீர்வை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றார்கள். அவர்கள் முடிவு எடுத்த பின்னர் அரசின் யோசனை குறித்து கருத்துத் தெரிவிக்க எமக்கு என்ன உரிமை உண்டு?

தியாகம் செய்பவர்கள் தான் தீர்வு பற்றித் தீர்மானிக்க வேண்டியவர்கள்.

வேறு எங்கோ இருக்கும் நாம் அது குறித்து வெளியிடுவது முறை அல்ல. பிரிக்கப்படாத தாயகம்தான் எமது அடிப்படை நிலை என்று அவர்கள் அடித்துச் சொன்ன பின்னர் நாம் குறுக்கிடலாமா?

இப்படிக் கேட்டார் அமைச்சர் தொண்டமான். (அ-எ)

## தமிழக...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

ஒன்றுக்காக இலங்கைத் தமிழர் பெருமளவு தியாகம் செய்துவிட்டனர்.

காணப்படும் தீர்வு ஏகமனதாக அவர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கவேண்டும்.

இப்படி டாக்டர் [illegible] பதிக்குச் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-[illegible])

## லண்டனில் கைதானோர் விவரம்

லண்டன், நவ. 20

லண்டன் ஈஸ்ட்ஹாம் பகுதியில் இடம்பெற்ற 3 இலங்கைத் தமிழரின் மரணங்கள் சம்பந்தமாக லண்டன் நீதிமன்றத்தில் கொலைக் குற்றஞ் சாட்டப்பட்ட ஐந்து பேரும் இலங்கைத் தமிழர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் பெயர்கள் வருமாறு:

1. சாமுவேல் வீரசிங்கம் குலசிங்கம், வயது 30.
2. நடராசா வரததாஸன் வயது 22.
3. ரவி சின்னராசா பொன்னு, வயது 21.
4. ஜெரால்ட் பிரபாகரன் நடராஜ், வயது 23.
5. பிரேமராஜ் சிவலிங்கம், வயது 22

கராஜ் ஒன்றில் இவர்கள் பணி புரிந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது

எதிர்வரும்செவ்வாய்க் கிழமைவரை இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (உ-எ)

## இஸ்ரவேல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நண்பகல் விருந்து அளித்துக் கௌரவித்தார்.

பின்னர் மாலை 5 மணி அளவில் கொழும்பில் இருந்து புறப்பட்டார்.

இரண்டு ஜனாதிபதிகளும் இருதரப்பு உறவுகள் குறித்தும் இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் குறித்தும் ஆராய்ந்தனர் - இப்படி கொழும்பில் உள்ள இஸ்ரவேல் நலன் பிரிவுத் தலைவர் திரு. ஹெயிம் டிவொன் தெரிவித்தார். (உ-எ-1)

## விடுதலைப்படை உரிமை

யாழ்ப்பாணம், நவ. 21

சம்மாந்துறை பொலீஸ் நிலையத் தாக்குதலுக்கு ஈ-பி-ஆர்-எல்- எவ்- வின் மக்கள் விடுதலைப் படை உரிமை கோரியிருக்கிறது.

இதில் பலர் கொல்லப்பட்டனர் என்றும் - நான்கு ஊர்காவல் படையினர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் ஈ- பி- ஆர்- எல்- எவ்- விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (உ)

சிப்பாயின்

## கொலை முயற்சி வெற்றி தற்கொலை முயற்சி தோல்வி

கொழும்பு, நவ. 21

பொலன்னறுவை இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் தனது உயர் அதிகாரி ஒருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்யவும் முயன்றார்.

அவர் மேற்கொண்ட கொலை முயற்சி வெற்றி பெற்றது ஆனால் தற்கொலை முயற்சி தோல்வியில் முடிவுற்றது.

இந்தச் சிப்பாய் படுகாயமுற்ற நிலையில் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். (உ-1)

விஜிதரனை விடுதலை செய்:

## முள்ளியவளையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

முள்ளியவளை, நவ. 21

இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட யாழ் பல்கலைக் கழக மாணவன் விஜிதரனை விடுதலை செய்யும்படி கோரி முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவர்கள் புதன் கிழமை ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்

கல்லூரி வளவிலிருந்து தண்ணீரூற்று குமுழமுனைச்சந்திவரை சென்ற இந்த ஊர்வலம் பின் முள்ளியவளை ஆஸ்பத்திரி வரை சென்று முடிவடைந்தது.

மாணவர்கள் 11 மணி தொடக்கம் ஒரு மணித்தியாலம் வரை வீதித் தடை போட்டதால் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டது.

ஆதரவு தெரிவுக்கும் முகமாக வர்த்தகர்களும் ஒரு மணித்தியாலம் வரை வர்த்தக நிலையங்களை மூடி வைத்திருந்தனர். (இ-93)

## 2 சிப்பாய்கள் படுகாயம்

கொழும்பு, நவ 21

முருங்கனில் நேற்று நடத்தப்பட்ட கண்ணி வெடித்தாக்குதல் ஒன்றில் 2 சிப்பாய்கள் படுகாயம் அடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

# பொய்ப் பிரசாரங்களை நாம் முறியடிப்போம்

## ஈ.பி.ஆர். எல். எவ், அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 21

பொய்ப் பிரசாரங்களை முறியடிப்போம் என்ற தலைப்பில் ஈ. பி. ஆர். எல். எவ் விடுத்த அறிக்கை வருமாறு:

ஈழவிடுதலைப் போராட்டத்தில் பலமான சக்தியான எம்மை ஈழவிடுதலைப் போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்தும் நோக்குடன் சிறீலங்கா அரசு சார்புப் பத்திரிகைகளும், ஒலிபரப்புச் சாதனங்களும் பலவிதமான பொய்ப்பிரசாரங்களை கட்டவிழ்த்து வருகின்றன.

இந்த அடிப்படையில் தான் அண்மையில் மேற்படி இனவாத ஸ்ரீலங்கா அரசினது பிரசார சாதனங்கள் கிளிநொச்சியில் எமது ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஐந்து தோழர்கள் ஆயுதங்களுடன் இராணுவத்தினரிடம் சரணடைந்துள்ளனர் என்ற உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டுள்ளன.

இந்தச் செய்தியின் அடிப்படையானது ஈழ விடுதலைப் போராளிகளையும் ஈழமக்களையும் பிரித்து விடும் சூழ்ச்சி என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. இது முற்றிலும் கற்பனையானது.

எமது தோழர்கள் ஈழ மண்ணையும், மக்களையும் மிக உறுதியாக நேசிப்பவர்கள்

எனவே இந்தச் செய்தியை கேட்டு குழப்பமடைய வேண்டாம்என ஈழமக்களை கேட்டுக் கொள்கிறோம் (இ)

## தொண்டமானாறில் தோல் இருக்க இறைச்சி வாங்கிகள்!

வல்வெட்டித்துறை, நவ. 21

தொண்டமானாறில் இராணுவ நடவடிக்கைகளினால் தமது வீடுகளை விட்டு அவசர அவசரமாக வெளியேறிய பொதுமக்கள் தாம் விட்டுச்சென்ற கால்நடைகளின் நிலைபற்றி அறிவதற்காக தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்றபோது அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அவர்களின் ஆடு, மாடுகளுக்குப் பதில் அவற்றின் உரித்த தோலும் எலும்புகளுமே மிஞ்சிக் கிடந்தன.

தோல் இருக்கச் சுளை விழுங்குவதுபோல் தோல் இடக்க இறைச்சி வாங்கிகள் வந்திருக்க வேண்டும் என அவர்கள் எண்ண வேண்டியதாயிற்று.

சிப்பாய்களின் ''திருவிளையாடல்''களுக்கு ஆடு, மாடுகள் கூடத் தப்பவில்லை என பொதுமக்கள் புகார் தெரிவித்தனர்.

இதே வேளை இருநாட்களாக தொண்டமானாறு சிப்பாய்களினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த சைவ ஆலயக் குருக்கள் ஒருவரும் இந்த இறைச்சியை உண்ணும்படி வற்புறுத்தப்பட்டதாகவும் அறியப்படுகின்றது

ஆனால் அவர் இருநாட்களாக உண்ண மறுத்ததன் காரணமாக உயர் அதிகாரிகளினால் விடுதலை செய்யப்பட்டார். (உ-160)

## வல்வெட்டித்துறையில் புதன் மாலையில் மோதல்

வல்வெட்டித்துறை, நவ 21

வல்வை இராணுவ முகாமின் மேற்கு வாசல் வழியாக புதன் மாலை 6-00மணியளவில் வெளியேற முயன்ற சிப்பாய்கள் விடுதலைப் புலிகளினால் விரட்டியடிக்கப்பட்டனர்.

ஓசையின்றி வெளியேறிய சுமார் ஐம்பதுக்கும் அதிகமான சிப்பாய்கள் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனையடுத்து சிப்பாய்கள் பின் வாங்கினர்.

சிப்பாய்கள் முகாமுக்குத் திரும்பிய சில நிமிடங்களின் பின் புலிகள் நடமாடிய மேற்குப்பக்கத் திசையை நோக்கி இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் நடந்தது.

எனினும் புலிகள் தரப்பில் எவ்விதசேதமும் ஏற்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது (உ-160)

## தேவை

யாழ் நகரில் அச்சகம் ஒன்றை நிர்வகிப்பதற்கு அச்சுத்தொழிலில் அனுபவம் உள்ள நிர்வாகி ஒருவர் தேவை. முன் அனுபவங்கள் பற்றிய விவரங்களுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு உடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல:- 50,
மே/பா உதயன்,
தபால்பெட்டி இல. 23,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org